
# இதழியல் துறையில் ஒரு புரட்சி! பெருமிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின்!




இதழியல் நிறுவனத்தை தொடங்கி வைக்கும் முதல்வர் ஸ்டாலின் -உடன் ஆசிரியர் வீரமணி, துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள் சாமிநாதன், மா.சு.

இதழியல் துறையில் உண்மையும் அறமும் ஒருசேர பயணித்து சர்வதேச அளவிலான பத்திரிகையாளர்களை உருவாக்கும் நோக்கத்தில் தமிழகத்தில் முதன்முறையாக இதழியல் கல்வி நிறுவனத்தைத் தொடங்கியிருக்கிறது தி.மு.க. அரசு. இந்த நிறுவனத்தை 25ந் தேதி தொடங்கிவைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்த நிகழ்வில் துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின், செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன், அமைச்சர் மா.சுப்பிரமணியன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, இதழியல் நிறுவனத்தின் தலைவர் ரவி, தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன், தமிழக அரசின் மாநிலத் திட்ட குழுத் துணைத்தலைவர் ஜெயரஞ்சன், மூத்த பத்திரிகையாளர்கள் நக்கீரன்கோபால், குணசேகரன், ப.திருமாவேலன், கார்த்திகைச்செல்வன், செய்தித் துறையின் உயரதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



மு.பெ. சாமி நாதன்
செய்தித் துறை அமைச்சர்



இதழியல்துறை தலைவர் ரவி



ஏ.எஸ். பன்னீர் செல்வம்

ஓராண்டு இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பு (PG Diploma in Journalism) 2025-2026 கல்வியாண்டான இந்த வருடம் முதல் தொடங்கியுள்ளது. இதழியல் கல்வியை உலகத் தரத்திற்கு உயர்த்துவதும், தமிழக மாணவர்களை மிகச் சிறந்த இதழாளர்களாகவும், கல்வியாளர்களாகவும் உருவாக்குவதே இதன் நோக்கமாகும். படைப்பாற்றலையும், பல்துறை திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும் செயல்திறன் கூடிய நவீன கல்வி முறையை இந் நிறுவனம் அறிமுகப்படுத்துகிறது.

இந்திய அளவில் இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மாஸ் கம்யூனிகேசன் எனும் அரசு நிறுவனத்தை இதழியலுக்காக ஒன்றிய அரசின் தகவல் தொடர்புத் துறை நடத்தி வருகிறது. ஆனால், எந்த ஒரு மாநில அரசும் இப்படி ஒரு கல்வி நிறுவனத்தை நடத்தவில்லை. அந்த வகையில், தமிழக பட்டதாரிகளுக்காக இந்த நிறுவனத்தை தி.மு.க. அரசு தொடங்கியிருப்பது தேசிய அளவில் உற்றுநோக்கப்படுகிறது.

இதழியல் துறைக்காக சிறப்பான ஒரு கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டிருப்பது குறித்து செய்தித்துறை அமைச்சர் சாமிநாதனை சந்தித்துப் பேசியபோது, "சுதந்திரத்தின் பயன்பாட்டை புரிந்துகொள்ள இதழியல் துறை பெரும் பங்காற்றுகிறது. தரவுகளின் அடிப்படையில் கொடுக்கப்படும் நம்பிக்கைக்குரிய செய்திகளே உரிமைக் கான முதல்படி. அதனை இலக்காகக் கொண்டு உண்மையும் அறமும் நேர்மையும் இதழியல் துறையில் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த நிறுவனத்தை தொடங்கியிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.



இதழியல் துறையில் முழுமையான பயிற்சிபெற்று திறமையான பத்திரிகையாளர்களாக, ஊடக வியலாளர்களாக, கல்வியாளர்களாகத் தமிழக மாணவர்கள் உருவாவதற்கு இந்த நிறுவனம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். இதழியல் துறை என்பது மெத்தப் படித்தவர்களுக்கும், வசதி படைத்தவர்களுக்குமே உரியது என்கிற மாயையில், அதெல்லாம் எட்டாக்கனி என நினைத்துக்கொண்டிருக்கும் ஏழை மாணவர் களுக்கு, இதழியல் துறை உங்களுக்கு எட்டும் கனிதான் என்கிற நம்பிக்கையை விதைப்பதற்கான முயற்சிதான் இந்த நிறுவனம் மிக மிகக் குறைவான கட்டணத்தில் சர்வதேச அளவிலான பாடத் திட்டங்கள் இங்கு பயிற்றுவிக்கப்பட விருக்கிறது.

இந்தத் துறையில் சேர்வதற்கு நடப்பாண்டில் 90 மாணவ-மாணவிகள் விண்ணப்பித்தனர். அவர்களில் தகுதியின் அடிப்படையிலும் இடஒதுக்கீட்டின் அளவு கோலிலும் 60 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இது ஒரு வருட முதுநிலை பட்டயப் படிப்பு. இந்த படிப்பு இரண்டு செமஸ்டர்களை உள்ளடக்கியது. பயிலும் மாணவ - மாணவிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன" என்கிறார் பெருமிதமாக.

இதழியல் கல்வி நிறுவனத்தின் தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வனை சந்தித்துப் பேசியபோது, "தமிழக அரசின் மாநிலத் திட்டக்குழு, கடந்த 2022-23 நிதியாண்டில் அரசுத் துறைகளில் நமக்கான இடைவெளி எங்கெல்லாம் இருக்கிறது என ஒரு ஆய்வை மேற்கொண்டபோது, தமிழகத்தில் இதழியல் துறையில் மாறுபட்ட சூழல் இருப்பதை கண்டறிந்தது. குறிப்பாக, பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் இதழியல் பட்டப்படிப்பு இருந்தாலும், ஒன்றிய அரசு மற்றும் யூ.ஜி.சி. யின் தலையீடுகள் இருக்கவே செய்கின்றன. இதழியல் துறையில் சுதந்திரமும், நேர்மையும் அவசியம். அதனால், தமிழக மாணவர்களுக்காக நாமே ஒரு கல்வி நிறுவனத்தை தொடங்கலாம் என்கிற கொள்கை முடிவின்படி உருவானதுதான் இந்த நிறுவனம்.

இன்றைய ஊடகம், அச்சு, ஒலி-ஒளிபரப்பு, இணையம் என பல்வேறு தளங்களில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதனை யொட்டி, வளர்ந்து வரும் சமூக ஊடகப் பார்வையையும் இணைத்து தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் திறமையான இதழாளர்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுத்திக்கொள்கிறது இதழியல் கல்வி நிறுவனம். தமிழும் ஆங்கிலமும் தெரிந்த சர்வதேச நிபுணர்களைக் கொண்டு கல்வி கற்றுத்தரப்படுகிறது. அதற்கேற்ப பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சிறந்த இதழாளர்கள், நிபுணர்கள், அறிஞர்கள், செயற்கை நுண்ணறிவு, அறிவியல், சமூக அறிவியல், சட்டம் மற்றும் நிர்வாகம் ஆகிய துறை களிலிருந்து வல்லுநர்களையும் அழைத்து சிறப்பு வகுப்புகள் எடுக்கப்படவுள்ளன.

இந்த நிறுவனம், நிறுவன சட்டவிதிகளின்படி பதிவு செய்யப்பட்டிருப்பதால், தனித்த அதிகாரம் கொண்ட ஒரு அமைப்பாகும். அரசு தலையீடோ, அரசியல் தலையீடோ துளியளவு கூட இருக்காது. நிறுவனத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு மட்டுமே அரசின் செயல்பாடாக இருக்கும். மேலும், அரசின் இடஒதுக்கீடு முறையை முழுமையாக கடைப்பிடிக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், தமிழகத்திலுள்ள 69 சதவீத இடஒதுக்கீட்டின் அளவைவிட அதிகமாகவே இந்த முறை மாணவ - மாணவிகளை சேர்த்திருக்கிறோம்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், கொடுக்கப்பட 1 இடம் வேண்டிய பழங்குடியினருக்கு 2 இடங்கள் தரப்பட்டுள்ளது. அதேபோல, 9 இடங்கள் தரப்பட வேண்டிய பட்டியிலினத்தவர்க்கு 15 இடங்களும், 16 இடங்கள் தரப்பட வேண்டிய பிற்படுத்தப்பட்டோருக்கு 31 இடங்களும், 12 இடங்கள் தரப்பட வேண்டிய மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 14 இடங்களும் அதிகரித்துத் தந்திருக்கிறோம். அதேபோல, பொதுப்பட்டியலில் போட்டியிடும் இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு அவர்களுக்கான இட ஒதுக்கீட்டு சலுகைகள் எந்த வடிவத்திலும் மறுக்கப்படவில்லை.

கல்விக்கட்டணம் என்கிற முக்கியமான ஒரு விசயம் இருக்கிறது. அதாவது இதழியல் கல்வி நடத்தும் ஒன்றிய அரசின் நிறுவனத்தில் பி.ஜி.டிப்ளமோ படிப்பை படிக்க வருடத்துக்கு 1,15,000 ரூபாயை கல்விக்கட்டணமாக வசூலிக்கிறது ஒன்றிய அரசு.

தனியார் கல்வி நிறுவனங்கள் குறைந்தபட்சம் 3 லட்சத்திலிருந்து 5 லட்சம் ரூபாய் வசூலிக்கின்றன. ஆனால், இதே பி.ஜி.டிப்ளமோ படிப்பை தமிழக அரசின் இதழியல் கல்வி நிறுவனம் ஆண்டுக்கு 10,000 ரூபாய் மட்டுமே கல்விக்கட்டணமாக நிர்ணயித்திருக்கிறது.

இதழியல் துறையில் இந்திய மொழிகளுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் தமிழ்மொழிக்கு இல்லை. ஆங்கில இதழியலுக்கும் தமிழ் இதழியலுக்குமான இடைவெளி அதிகம். அதனை குறைத்து, வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வது இந்த நிறுவனத்தின் தலையாய பணி. நிச்சயம் இதழியல் துறையில் ஒரு புரட்சியும் மறுமலர்ச்சியும் இந்த நிறுவனம் ஏற்படுத்தும்" என்கிறார் உணர்வுப்பூர்வமாக!

நன்றி :
**'நக்கீரன்'**
ஆக 30- செப்.2



கோவை மாநகராட்சி வார்டு எண் 29, பட்டியண்ண கவுண்டர் செல்லம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகர் மாவட்டச் செயலாளர் சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் ஆகியோர் தொடங்கி வைத்து விண்ணப்பதாரர்களுக்கு உடனடி தீர்வுகளை வழங்கினர். அருகில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், உதவி ஆட்சியர் (பயிற்சி) மரு.பிரசாந்த், மண்டல குழு தலைவர் கதிர்வேல், மாமன்ற உறுப்பினர்கள் சரண்யா செந்தில்குமார், கண்ணகி ஜோதி பாசு, சித்ரா வெள்ளிங்கிரி உள்பட பலர் உள்ளனர்.

### கழக முப்பெரும் விழாவையொட்டி

# நீலகிரி மாவட்டம் முழுவதும் கழகக் கொடியேற்றல் - பொதுக்கூட்டம்!

## மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

*நீலகிரி, செப்.3-*

*நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவை தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறு ப்பாளர் கே.எம்.ராஜூ அனைவரையும் வரவேற்றார். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு. முபாரக், தேர்தல் பணி செயலாளர், அரசு கொறடா கா.ராமச்சந்திரன், கூடலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரமேஸ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், திராவிடமணி, செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் காமராஜ், நெல்லை கண்ணன், தொரை, பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, சுஜேஷ், ராஜ்குமார், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, லியாகத் அலி, செல்வம், உதயதேவன், ராஜேந்திரன், அமிர்தலிங்கம், மகேஷ், காளிதாசன், வாணீஸ்வரி, பேரூர் கழக செயலாளர்கள் உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், சஞ்சீவ்குமார், முத்து, ரமேஷ் குமார், சின்னவர், சுப்ரமணி, மார்டின், மாவட்ட அணிகளின் அமை ப்பாளர்கள் சசிகுமார், கோமதி, ராஜா, எல்கில் ரவி, காந்தல் ரவி, ராம்குமார், ரஹமத்துல்லா, ஜெயந்தி, வெங்கடேஷ், பவீஷ், செந்தில்நாதன், ஜெய குமார், சுரேஷ், பவீஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நௌபுல், பாபு, நாகராஜ், பத்மநாபன், வினோத்குமார், நகராட்சி தலைவர்கள் பரிமளா, சிவகாமி, ஜெயகுமாரி, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, கௌரி, சித்ரா தேவி, வள்ளி, ஹேமமாலினி, ராதா, தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், உட்பட கழக நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர். கூட்ட முடிவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரா விட மணி நன்றி கூறினார்.*

**நீலகிரி மாவட்டத்தில் கழக முப்பெரும் விழா நிகழ்ச்சிகள்!**

*தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் மற்றும் கழகம் தோன்றிய தினம் ஆகியவை உள்ளடக்கிய கழக முப்பெரும் விழாவாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது.*

*அதேபோல், இவ்வாண்டு செப்டம்பர் 17 அன்று தலைமைக் கழகத்தின் சார்பில் கரூர் மாவட்டத்தில் விருதுகள் வழங்கும் நிகழ்வோடு சிறப்போடு நடை பெறவுள்ளது. இதில் கழக நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொள்வது எனவும்,*

*நீலகிரி மாவட்டத்தில் செப்டம்பர் 15ம் தேதி முப்பெரும் விழா நிகழ்ச்சிகளாக கழக கொடியேற்று விழா நிகழ்ச்சிகள், முதியோர் இல்லங்களில் உணவுகள் வழங்குதல், பொதுக்கூட்டங்கள், தெருமுனை கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை மாவட்டத்திலுள்ள அனைத்து நகர ஒன்றிய - பேரூர் - கிளை கழக பகுதிகளிலும் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.*

**விருது பெறுபவர்களுக்கு வாழ்த்து!**

*ஒவ்வொரு ஆண்டும் தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெறும் கழக முப்பெரும் விழா நிகழ்ச்சிகளில் கழகத்தில் சிறந்து விளங்கியவர்களுக்கு தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - தலைவர் கலைஞர் - பாவேந்தர் - இனமான பேராசிரியர் மற்றும் கழக தலைவர் ஆகியோரது பெயர்களில் விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்படுவார்கள்.*

*அதேபோல், இவ்வாண்டு கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழா நிகழ்ச்சியில்*

*பெரியார் விருது - கழக துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்களுக்கும்*

*அண்ணா விருது - முன்னாள் தணிக்கைக்குழு உறுப்பினர் சுப.சீத்தாராமன் அவர்களுக்கும்*

*கலைஞர் விருது - முன்னாள் சட்டபேரவை உறுப்பினர் சோ.மா.இராமசந்திரன் அவர்களுக்கும்*

*பாவேந்தர் விருது - கழக மூத்த முன்னோடி குளித்தலை சிவராமன் அவர்களுக்கும்*

*பேராசிரியர் விருது - முன்னாள் சட்டமன்ற கொறடா மருதூர் ராமலிங்கம் அவர்களுக்கும்*

*மு.க.ஸ்டாலின் விருது - முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி அவர்களுக்கும்*

*வழங்கப்பட உள்ளது. விருதுகள் பெறும் அனைவருக்கும் நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.*

**கழக உறுப்பினர் சேர்க்கை ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி!**

*கழக தலைவர் - தமிழக முதல்வர் அவர்கள் மதுரையில் நடந்த கழக பொதுக் குழு கூட்டத்தில் அறிவித்தப்படி, "ஓரணியில் தமிழ்நாடு" எனும் கழக உறுப்பினர் சேர்க்கை பணி நீலகிரி மாவட்டத்தில் துவங்கப்பட்டது.*

*தலைமைக் கழகம் சார்பில் மக்களுடன் ஸ்டாலின் எனும் செயலி மூலம் ஒவ்வொரு வாக்குச்சாடியிலும் 40 சதவீத வாக்காளர்களை உறுப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும் என உதகை - கூடலூர் - குன்னூர் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளுக்கும் இலக்கு நிர்ண யித்திருந்த நிலையில், நீலகிரி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட 40 சதவீத இலக்கிற்கும் மேலாக உறுப்பினர்கள் சேர்க்கபட்டுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரிய தாகும்.*

*இப்பணியில் ஈடுபட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகர - ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள், BLA - 2, BDA உட்பட ஒவ்வொரு கழக தொண்டர்களுக்கும் இக்கூட்டம் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறது.*

*இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.சடகோபன்

**செப்டம்பர் 3 (1979)**



சென்னையில் கழகத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் ஒருவர்.

1961ஆம் ஆண்டு சென்னை நகரக் குடிசை வாழ்வோர் மாநாடு நடத்தி அந்த சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தவர்.

கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும், 1959 முதல் 1968 வரை சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், 1965–66இல் துணை மேயராகவும், 1967இல் மாநகராட்சி மத்திய குழு தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்டவர்.

தலைவர் கலைஞரின் அன்புக்கு பாத்திரமானவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.